| 28.06.2024 | 25. இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகளின் கீழ் பல்வேறு வகையான பணிகள் இம்மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அரசு அவ்வப்போது செயல்படுத்தும் திட்டப்பணிகளின் கீழ் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதால் கணினி தட்டச்சு பணிகள் மேற்கொள்ள பொறியியல் பிரிவிற்கு கணினி இயக்குபவர்கள் மற்றும் பொறியியல் பிரிவில் செயல்பட்டு வரும் 4-மண்டலங்களுக்கும் மதிப்பீடு தயார் செய்தல் மற்றும் பணிகளை மேற்பார்வை செய்வதற்கு தொழில்நுட்ப உதவியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்கான ஒப்பந்த காலம் எதிர்வரும் 31.07.2024 அன்றுடன் முடிவடைகிறது. எனவே 01.08.2024 முதல் 31.07.2025 வரையிலான 1-வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.34535/2023/ஜி2, நாள்.03.08.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி 3 எண்ணிக்கையிலான கணினி இயக்குபவர் பணியிடத்தில் தினக்கூலி நிர்ணயம் செய்தும், பொதுப்பணித்துறையின் விலைவிகித அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 10-எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்தில் தினக்கூலி நிர்ணயம் செய்தும் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.65,70,000/-க்கு (ரூபாய் அறுபத்தைந்து இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.65,70,000/-க்கு (ரூபாய் அறுபத்தைந்து இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 6823/2024/எம்சிஇ5) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 28.06.2024 | 26. தஞ்சாவூர் மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு தூய்மைப் பணியாளர்கள் – 10 எண்ணிக்கை, ஓட்டுநர்-1 எண்ணிக்கை, காவலர்கள்–6 எண்ணிக்கை (மாநகராட்சி அலுவலகம், அய்யன்குளம் மற்றும் சாமந்தான் குளம்), செயல் திறன் பணியாளர் 1 எண்ணிக்கை (எலக்ட்ரிசன் / பிளம்பர்) ஆக மொத்தம் 18- எண்ணிக்கையிலான பணியாளர்களை சப்ளை செய்யும் பணி ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்கான ஒப்பந்த காலம் எதிர்வரும் 31.07.2024 அன்றுடன் முடிவடைகிறது. எனவே 01.08.2024 முதல் 31.07.2025 வரையிலான 1-வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.34535/2023/ஜி2, நாள்.03.08.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி 18-எண்ணிக்கையிலான பலதரப்பட்ட பணியாளர்களுக்கான தலைப்பில் தினக்கூலி அட்டவணையில் கூலி நிர்ணயம் செய்து பணியமர்த்தி ஆட்கள் சப்ளை செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.54,50,000/-க்கு (ரூபாய் ஐம்பத்தி நான்கு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.54,50,000/-க்கு (ரூபாய் ஐம்பத்தி நான்கு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.7002/2024/எம்சிஇ5) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 28.06.2024 | 27. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் JCB 30+ 2 (M/C Sr No.3077588 MINI HITTACHI) வாகனத்தின் SOLCNOID SWITCH பழுதாகி வாகனத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகனம் பொதுசுகாதார பிரிவு வாகனம் என்பதால், பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு வாகனம் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனத்திலேயே பழுது மற்றும் சர்வீஸ் செய்வதற்கு M/S.JAYARAJ AUTO MOBILE AGENCY, THANJAVUR என்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பட்டியல் தொகையாக ரூ.11,606/- (ரூபாய் பதினோறாயிரத்தி | பதிவு செய்து அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

அறுநூற்றி ஆறு மட்டும்) வரப்பெற்றுள்ளதை ஏற்று பணிகள் மேற்கொள்ளப்படும் விவரம் மாமன்றத்தின் தகவலுக்கு.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) இப்பணிக்கான விலைப்புள்ளித்தொகை ரூ.11,606/- (ரூபாய் பதினோறாயிரத்தி அறுநூற்றி ஆறு மட்டும்) ஏற்று பணிகள் மேற்கொள்ளப்படும் விவரத்தினை மாமன்றம் பதிவு செய்யலாம்.

2) இதற்கான செலவினத்தை 2024-25 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

3) மேற்கண்ட நிறுவனத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.11001/2023/எம்சிஇ5)

**28.06.2024**

28. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 51 வரையிலான வார்டுகளில் உள்ள பவர் பம்ப் மற்றும் மினி பவர் பம்ப் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்ய வேண்டியது அவசியமாகிறது. தற்போது கோடைக்காலம் துவங்க இருப்பதை முன்னிட்டு பொதுமக்கள் நலன் கருதியும் மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் வார்டு எண்.1 முதல் 51 வரையிலான வார்டுகளில் உள்ள பவர் பம்ப் மற்றும் மினி பவர் பம்ப் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சீர்செய்யும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.15,00,000/-க்கு (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) 20.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மாமன்றத்தின் ஒப்புதலுக்கு

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | M/S.AB Electricals, Coimbatore | 1256911.00 | மதிப்பீட்டு தொகையை விட குறைவு (-) 0.08% |
| 2. | M/S.Ever green Enterprises, Thanjavur | 1261493.00 | மதிப்பீட்டு தொகையை விட (+) 0.28 % அதிகம் |

அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u><br>1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்டுள்ள (-) 0.08% குறைவாக ரூ. 1256911/- என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.AB Electricals, Coimbatore என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.749/2024/எம்சிஇ5) | |
| 28.06.2024 | 29. தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.03 A.S.அன்பழகன் நகர் பகுதியில் கட்டுமான பொருள் மீட்பு வசதிகள் அமைக்கும் (Material recovery facilities) கட்டிடத்திற்கு 38 KW மும்முனை மின் இணைப்பு பெறுவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து கட்டணத்தொகை ரூ.116492/- (ரூபாய் ஒரு இலட்த்தி பதினாறாயிரத்தி நானூற்றி தொன்னூற்றி இரண்டு மட்டும்) கேட்பு பட்டியலாக வரப்பெற்றது. எனவே மேற்கண்ட தொகையினை மின்சார வாரியத்திற்கு செலுத்துவற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகை ரூ.116492/- (ரூபாய் ஒரு இலட்த்தி பதினாறாயிரத்தி நானூற்றி தொன்னூற்றி இரண்டு மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.66/2023/எம்சிஇ6) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 28.06.2024 | 30. தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.22 இராஜா மிராசுதார் சாலை (RMH சாலை) அண்ணா சிலை எதிரில் வாகன போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள 4 மின் கம்பங்கள், 1- மின் மாற்றி மற்றும் 1 AB சுவிட்ச் இவைகளை வேறு இடத்திற்கு மாற்றி அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து கட்டணத்தொகை ரூ.970640/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து எழுபதாயிரத்து அறநூற்று நாற்பது மட்டும்) கேட்பு வரப்பெற்றள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதை மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு செலவினத்தொகை ரூ.970640/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து எழுபதாயிரத்து அறநுற்று நாற்பது மட்டும்) தமிழ்நாடு மின்சார வாரியத்தற்கு செலுத்தியதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | 2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.66/2023/எம்சிஇ6) | |
| 28.06.2024 | 31. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.50 நிர்மலா நகர் பகுதியில் தெருவிளக்கு வசதி இல்லாத காரணத்தினால் தெருவிளக்கு வசதி அமைத்து தர கோரி முதலமைச்சர் தனி பிரிவில் இருந்து வரப்பெற்ற கடிதத்திற்கு பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் புதியதாக மின் வசதி ஏற்படுத்தவும் புதிய மின் தடம் மற்றும் புதிய (3) மூன்று மின்கம்பங்கள் அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.75000/-ம் (ரூபாய் எழுபத்தி ஜந்தாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஓப்புதலுக்கு.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகை ரூ.75000/-ம் (ரூபாய் எழுபத்தி ஜந்தாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.66/2023/எம்சிஇ6) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 28.06.2024 | 32. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.51 புதிய பேருந்து நிலையம் அருகில் புதிதாக கட்டடப்பட்டுளள ஆம்னி பேருந்து நிலையத்தில் தெரு விளக்கு வசதிகள் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் நலன் கருதி, 120 W LED தெரு விளக்கு மற்றும் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து பொருத்தும பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1500000/-க்கு (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஓப்புதலுக்.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.1500000/-க்கு (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியின் கீழ் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.368/2023/எம்சிஇ6) | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 28.06.2024 | 33. தஞ்சாவூர் காவேரி பப்ளிக் வெல்பேர் டிரஸ்ட், நிறுவனத்தால் இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட TPS நகர் மனைப்பிரிவில் அமைந்துள்ள பூங்கா இடத்தில் குறுங்காடுகள் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து தருமாறும், அவர்களது சொந்த செலவில் மரம் நட்டு வேலி அமைத்து மூன்று வருடம் பராமரித்து தருவதாகவும், விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பூங்கா இடத்தில் மேலே கண்ட நிறுவனம் அவர்களது சொந்த செலவில் வேலி அமைத்து, மரம் நட்டு, குறுங்காடுகள் அமைத்து கீழ்கண்ட நிபந்தனைகளுடன் மூன்றாண்டுகள் பராமரித்து தர ஏதுவாக இடத்தை ஒப்படைப்பதற்கு மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**நிபந்தனைகள்** :<br>❖ சுற்றுச் சுவர் முள் வேலி அமைத்துக் கொள்ள வேண்டும்.<br>❖ மின்சார கட்டணம் மனுதாரர் செலுத்திட வேண்டும்.<br>❖ மனுதாரர் சொந்த செலவில் மரம் நட்டு பராமரித்து மூன்றாண்டுகள் முடிவில் மாநகராட்சி வசம் எவ்வித மறுப்புமின்றி ஒப்படைக்க வேண்டும். அதன் மீது எவ்வகையிலும் உரிமை கோர கூடாது மற்றும் கட்டுமானங்கள் ஏதும் கட்டக் கூடாது. தேவைப்படும் நேரங்களில் மாநகராட்சி கோரும் போது எவ்வித மறுப்புமின்றி உடனடியாக இடத்தை ஒப்படைக்க வேண்டும்.<br>❖ மேற்படி குறுங்காடுகள் அமைக்கவும், பராமரிக்கவும் ஆகும் செலவினங்களை தாங்களே ஏற்க வேண்டும்.<br>❖ நுழைவு கட்டணம் ஏதும் வசூல் செய்யக் கூடாது.<br>**அலுவலக குறிப்பு**<br>அனுமதிக்கலாம். ந.க.எண். 5260/2024/எம்சிஎப்1 | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |
| 28.06.2024 | 34. ரோட்டரி கிளப் ஆஃப் தஞ்சாவூர் காவேரி, நிறுவனத்தால் இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட SNM நகர் மனைப்பிரிவில் பூங்கா இடத்தில் குறுங்காடுகள் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து தருமாறும், அவர்களது சொந்த செலவில் மரம் நட்டு வேலி அமைத்து மூன்று வருடம் பராமரித்து தருவதாகவும், விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பூங்கா இடத்தில் மேலே கண்ட நிறுவனம் அவர்களது சொந்த செலவில் வேலி அமைத்து, மரம் நட்டு, குறுங்காடுகள் அமைத்து கீழ்கண்ட நிபந்தனைகளுடன் மூன்றாண்டுகள் பராமரித்து தர ஏதுவாக இடத்தை ஒப்படைப்பதற்கு மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது. | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | **நிபந்தனைகள்** :<br>❖ சுற்றுச் சுவர் முள் வேலி அமைத்துக் கொள்ள வேண்டும்.<br>❖ மின்சார கட்டணம் மனுதாரர் செலுத்திட வேண்டும்.<br>❖ மனுதாரர் சொந்த செலவில் மரம் நட்டு பராமரித்து மூன்றாண்டுகள் முடிவில் மாநகராட்சி வசம் எவ்வித மறுப்புமின்றி ஒப்படைக்க வேண்டும். அதன் மீது எவ்வகையிலும் உரிமை கோர கூடாது மற்றும் கட்டுமானங்கள் ஏதும் கட்டக் கூடாது. தேவைப்படும் நேரங்களில் மாநகராட்சி கோரும் போது எவ்வித மறுப்புமின்றி உடனடியாக இடத்தை ஒப்படைக்க வேண்டும்.<br>❖ மேற்படி குறுங்காடுகள் அமைக்கவும், பராமரிக்கவும் ஆகும் செலவினங்களை தாங்களே ஏற்க வேண்டும்.<br>❖ நுழைவு கட்டணம் ஏதும் வசூல் செய்யக் கூடாது.<br>**அலுவலக குறிப்பு**<br>அனுமதிக்கலாம். ந.க.எண். 5261/2024/எம்சிஎப்1 | |
| **28.06.2024** | 35. தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் திருமதி. கனிமொழி சோபியா என்பவர் தஞ்சாவூர் மாநகரம், பாண்டியன் நகர், மேலவெளித்தோட்டம், புல எண். 201/1-ல் மனை எண். 23, 3735 ச.அடி இடத்தை திருமதி. தஸ்லீம் பாத்திமா என்பவரிடமிருந்து 30.12.2011-ல் கிரையம் பெறப்பட்டதாகவும், இவ்விடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு அன்னாருக்கு விற்ற நபரான திருமதி. தஸ்லீம் பாத்திமா என்பவருக்கு 26.06.2011-ல் மாநகராட்சியால் கட்டிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், நிதி பற்றாக்குறையால் மேற்படி நபரால் கட்டிடம் கட்ட இயலவில்லை என்றும், திருமதி. கனிமொழி சோபியா 15.04.2014-ம் தேதி மாநகராட்சியிடம் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பித்தும் கட்டிட அனுமதி அளிக்காததால் மேற்படி இடத்தில் கட்டிட அனுமதி வழங்குவதற்கு உரிய உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் இம்மாநகராட்சி ஆணையரை பிரதிவாதியாகச் சேர்த்து வழக்கு தொடரப்பட்டது.<br>இவ்வழக்கின் (W.P (MD) No. 8327/2014) 15.05.2014-ம் தேதிய தீர்ப்பாணையில் தீர்ப்பாணை கிடைக்கப்பெற்ற இரண்டு மாத காலங்களுக்குள் வாதியின் விண்ணப்பத்தின் மீது உரிய விதிகளுக்குட்பட்டு உத்தரவு பிறப்பிக்கத் தெரிவிக்கப்பட்டது. | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |

மேற்படி இடம் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்கா மற்றும் விளையாட்டுத்திடலில் பொது உபயோக பகுதியில் அமைகிறது என்றும், மனைப்பிரிவு நிபந்தனை 13 ஐ பாதிப்பதாலும், SA No. 1139/1996, நாள். 31.01.2007 மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை SA No. 102/2004 & CMP No. 257/2004 –ல் நாள். 19.02.2004 உச்சநீதி மன்ற தீர்ப்புகளின் படி பொது உபயோக இடத்தில் கட்டிட அனுமதி வழுங்கக்கூடாது என தீர்ப்பு வழுங்கப்பட்டுள்ளதை காரணம் தெரிவித்து மாநகராட்சியால் 27.06.2014 ம் தேதியில் வாதிக்கு கட்டிட அனுமதி மறுக்கப்பட்டது.

மேற்படி உத்தரவை எதிர்த்து வாதியால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வாதிக்கு விற்ற நபரான திருமதி. தஸ்லீம் பாத்திமா என்பவருக்கு ஏற்கனவே மாநகராட்சியால் கட்டிட அனுமதி வழுங்கப்பட்டுள்ளதாலும், மேலும் இதற்கு முன் திரு.செல்வராஜ் என்பவர் திருமதி. தஸ்லீம் பாத்திமா என்பவருக்கு விற்பனை செய்வதற்கு பத்திரம் பதிவு செய்ய ஆட்சேபணை இல்லை என இவ்வலுவலகக் கடிதம் ஓ.மு.30080/2000/எப்1, நாள். 02.02.2001-ல் கடிதம் அளிக்கப்பட்டுள்ளதாலும், மாநகராட்சியின் 27.06.2014-ம் தேதிய உத்தரவை ரத்து செய்து வாதிக்கு கட்டிட அனுமதி வழுங்க உரிய உத்திரவிடக் கோரி வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கின் (W.P (MD) No. 17346/2014) தீர்ப்பாணையில் மேற்படி இடம் பூங்காவிற்கு என்பதற்கு ஒதுக்கப்பட்ட இடம் என்பதற்கு போதுமான ஆவணங்கள் இல்லை எனவும், ஏற்கனவே மாநகராட்சியால் கட்டிட அனுமதி வழுங்கப்பட்டுள்ளதாலும், தீர்ப்பாணை கிடைக்கப்பெற்ற 4 வார காலத்திற்குள் வாதிக்கு கட்டிட அனுமதி வழுங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி, தடையின்மை சான்று வழுங்கியது மனைப்பிரிவு நிபந்தனை மற்றும் விதிகளுக்கு எதிரானது என்றும், மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் பொது உபயோகத்திற்கு என ஒதுக்கப்பட்ட இடம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு இடமாகிறது எனவும், தெரிவித்து சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் மாநகராட்சியால் மேல்முறையீடு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| | பாண்டியன் நகர் குடியிருப்போர் நலச்சங்கத்தின் 14.11.2015-ம் தேதிய கடிதத்திலும் மாநகராட்சி உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் சார்பாக மேல்முறையீடு செய்ய கடிதம் அளிக்கப்பட்டது.<br>இந்நிலையில் W.P (MD) No. 17346/2014 வழக்கின் 14.08.2015-ம் தேதிய உயர்நீதி மன்ற உத்தரவின் படி திருமதி. கனிமொழி சோபியா என்பவர் கட்டிட அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது.<br>மேற்கண்ட மேல்முறையீட்டு வழக்கின் (W.A (MD) No. 1300/2015) 12.02.2024-ம் தேதிய தீர்ப்பாணையில் பொது உபயோக இடத்தில் ஏற்கனவே 2001-ல் மாநகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும், இடத்தின் உரிமையாளரான பிரதிவாதிக்கு மிகவும் காலதாமதாக கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி மறுக்கப்படுவதாலும் பொது உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதி எந்தவொரு சட்டப்பூர்வ ஒப்புதலுக்கும் இணங்காது என்றும், இழப்பீடு இல்லாமல் மாநகராட்சியால் இடத்தை காலியாக வைத்திருக்க சொல்ல இயலாது எனவும் தெரிவித்து ஏற்கனவே 14.08.2015-ல் வழங்கப்பட்ட W.P (MD) No. 17346/2014 வழக்கின் தீர்ப்பாணை நிலை நிறுத்தப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.<br>சென்னை உயர்நீதி மன்ற (W.A. No. 156/2000 & 45/2003 ) வழக்கின் தீர்ப்பாணையில் மனைப்பிரிவில் பொது உபயோகத்தை மனைப்பிரிவின் உரிமையாளர் அதிகபட்சமாக 6 மாத காலத்திற்குள் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், அவ்வாறு பராமரிக்கப்படவில்லை என்றால் அதனை உள்ளாட்சி பராமரிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு மாறாக பூங்கா இடத்தில் குடியிருப்புக் கட்டிடம் கட்ட அனுமதி அளிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உத்தரவிடப்பட்டுள்ளது.<br>மேலும், மேலே கண்ட பூங்கா இடம் நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதியின்றி மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டத்தில் பூங்கா என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இடம் நகரளவை ஆவணங்களிலும் மாநகராட்சி பெயரில் உள்ளது.<br>இம்மாநகராட்சியால் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேல் முறையீட்டு வழக்கின் தீர்ப்பாணையில் 4 வார காலத்திற்குள் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்கா இடத்தில் கட்டிட அனுமதி வழங்கப்பட வேண்டும் என ஏற்கெனவே 14.08.2015-ம் தேதியில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவை | |

| | | |
|---|---|---|
| | நிலை நிறுத்தப்பட்டுள்ளதால் இவ்வுத்தரவை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யவும், வழக்கிற்கான செலவு தொகையை இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>அனுமதிக்கலாம். ந.க.எண். 4684/2014/எம்சிஎப்4 | |
| 28.06.2024 | 36. தஞ்சாவூர் மாநகரம், தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார நகர்புற மேம்பாட்டு (NULM) திட்டத்தில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் 2 சிறப்பு இல்லங்கள் மற்றும் இராஜா மிராசுதாரர் மருத்துவமனை வளாகத்தில் உள்ள 1 சிறப்பு இல்லம் (Special Shelter) மருத்துவமனைக்கு வரும் நோயாளியுடன் வரும் உதவியாளருக்காக அரசு நிதியின் கீழ் மாநகராட்சியால் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி 3 சிறப்பு இல்லங்களையும் அன்னை கம்சலை கல்வி அறக்கட்டளை, MIG, 519, குறிஞ்சி, தஞ்சாவூர் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் தொடர்ந்து பராமரிப்பதற்கு அனுமதி கோரியுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு மாநகராட்சியின் நிபந்தனை மற்றும் இத்திட்ட அரசு வழிகாட்டுதலின் படி தொடர் பராமரிப்புக்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதி வழங்கலாம். ந.க.எண். 13338/2023 /MCF5 | அனுமதி வழங்கிட தீர்மானிக்கப்படுகிறது |
| 28.06.2024 | 37. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி நடவடிக்கையாக வீடுகள் தோறும் கொசுப்புழு அழிக்கும் பணிக்கு தினக்கூலி பணி அடிப்படையில் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணி 30.04.2024 அன்று ஒப்பந்த பணி முடிவடைவதால் டெங்கு காய்ச்சல், மலேரியா காய்ச்சல் தடுப்பு பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டு போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் ஏற்கெனவே ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.திலீப்குமார், தஞ்சாவூர் என்பவருக்கு அதே ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒரு மாதத்திற்கு (01.05.2024 முதல் 30.06.2024 வரை) 100 நபர்களுக்கு நீட்டிப்பு செய்திடவும் மேற்படி பணிக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறை உத்திரவு ந.க.எண்.34535/2023/ஜி2 நாள்.03.08.2023ம் தேதியின் படி தெரிவிக்கப்பட்ட விலைப்புள்ளி விலை நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.590/- (EPF 13.61% + | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | ரூ.80.29 + ESI 3.25% ரூ.19.17 + நிர்வாக செலவினம் 10% ரூ.59/- ஆக கூடுதல் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.748/- விலை விகிதத்துடன் ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,00,000/-க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கு அதே மதிப்பீட்டு விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2023-2024ம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ளலாம். **ந.க.எண்**. 8933/2021/**எச்**.8 | |
| **28.06.2024** | 38. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 51 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி நடவடிக்கையாக வீடுகள் தோறும் கொசுப்புழு அழிக்கும் பணிக்கு தினக்கூலி பணி அடிப்படையில் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணி 30.06.2024 அன்று ஒப்பந்த பணி முடிவடைவதால் டெங்கு காய்ச்சல், மலேரியா காய்ச்சல் தடுப்பு பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டு ஏற்கெனவே ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.திலீப்குமார், தஞ்சாவூர் என்பவருக்கு அதே ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் மூன்று மாத காலங்களுக்கு (01.07.2024 முதல் 30.09.2024 வரை) 100 நபர்களுக்கு நீட்டிப்பு செய்திடவும் மேற்படி பணிக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறை உத்திரவு ந.க.எண்.34535/2023/ஜி2 நாள்.03.08.2023ம் தேதியின் படி தெரிவிக்கப்பட்ட விலைப்புள்ளி விலை நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.590/- (EPF 13.61% + ரூ.80.29 + ESI 3.25% ரூ.19.17 + நிர்வாக செலவினம் 10% ரூ.59/- ஆக கூடுதல் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.748/- விலை விகிதத்துடன் ஆகும் உத்தேச செலவினம் ரூ80,00,000/-க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கு அதே மதிப்பீட்டு விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2024-2025ம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ளலாம். **ந.க.எண்**. 8933/2021/**எச்**.8 | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| **28.06.2024** | 39. | தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன் படி திருத்தியமைக்கப்பட்ட தொழில் உரிம கட்டண விகிதங்களுக்கு மாமன்றத் தீர்மானம் எண்.664 நாள்.08.03.2024-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திருத்தியமைக்கப்பட்ட தொழில் உரிம கட்டண விகிதங்களை பொது மக்கள் அறியும் வகையில் இரண்டு தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அதற்கான செலவினம் ரூ.2,00,000/-க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட திருத்தியமைக்கப்பட்ட தொழில் உரிம கட்டண விகிதங்களை பொது மக்கள் அறியும் வகையில் இரண்டு தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அதற்கான செலவினம் ரூ.2,00,000/-க்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்கண்ட செலவினை 2024-25 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.12033/2023/எச்.8** | அலுவலக குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| **28.06.2024** | 40. | திரு க.அய்யப்பன், 2வது வட்ட மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>2வது வட்டத்தில் உள்ள பூக்குளம் புதுநகர் விரிவாக்கப்பகுதிக்கு சாலை வசதியும் மற்றும் நான்கு தெரு மின் விளக்குகள் அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு க.அய்யப்பன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு சு.செந்தமிழ் செல்வன்<br>நிறைவேறியது |
| **28.06.2024** | 41. | திருமதி து.சுகந்தி, 3வது வட்ட மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>3வது வட்டத்தில் உள்ள சருக்கை சவேரியார் கோவில் தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி து.சுகந்தி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி இ.சுமதி<br>நிறைவேறியது |
| **28.06.2024** | 42. | திருமதி இ.சுமதி, 4வது வட்ட மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>4வது வட்டத்தில் உள்ள கீரைக்காரதெருவில் ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டி (OHT) கட்டிட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி இ.சுமதி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி து.சுகந்தி<br>நிறைவேறியது |

| | | |
|---|---|---|
| **28.06.2024** | 43. திரு R.தெட்சிணாமூர்த்தி, 25வது வட்ட மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>25வது வட்டத்தில் உள்ள பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள யூனியன் கிளப் அலுவலகத்தில் போட்டித்தேர்வு எழுதும் மாணவர்களுக்கான நுலகம் அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு<br>ஆர்.தெட்சிணாமூர்த்தி<br>வழி மொழிந்தவர் :<br>திரு ஜெ.வி.கோபால்<br>நிறைவேறியது |
| **28.06.2024** | 44. திருமதி எ.ஸ்டெல்லா நேசமணி, 29வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>29வது வார்டில் உள்ள சிவராயர் தோட்டம் முதல் தெரு மற்றும் மிஷன் மேட்டுத்தெரு ஆகிய தெருக்களின் சாலைகளில் புதிதாக தார் சாலைகள் அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி ஏ.ஸ்டெல்லா<br>நேசமணி<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி அ.கெஜலெட்சுமி<br>நிறைவேறியது |
| **28.06.2024** | 45. திருமதி செ.வனிதா, 33வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>33வது வார்டில் உள்ள வண்டிக்காரத்தெரு மாநகராட்சி நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் செய்திடவும், சிசிடிவி கேமரா பொருத்திடவும், மும்முனை மின்சார வசதி செய்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமத செ.வனிதா<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி வி.செந்தில்குமாரி<br>நிறைவேறியது |
| **28.06.2024** | 46. திரு சு.செந்தில், 34வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>34வது வார்டில் உள்ள புது ஆற்று கல்லணைக்கால்வாயில் அடியில் உள்ள பாலம் உடைப்பு ஏற்பட்டு ஆற்றில் கழிவு நீர் கலப்பதை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு சு.செந்தில்<br>வழி மொழிந்தவர் :<br>திரு டி.லெனின்<br>நிறைவேறியது |
| **28.06.2024** | 47. திருமதி ச.ரம்யா, 38வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>38வது வார்டு அண்ணா நகர் 7ம் தெருவில் பழுதடைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றை மாற்றி புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து பம்பிங் ரூம் மற்றும் 2000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் பொருத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திருமதி ச.ரம்யா<br>வழி மொழிந்தவர் :<br>திருமதி ம.உஷா<br>நிறைவேறியது |

| | | |
|---|---|---|
| **28.06.2024** | 48. திரு ஜி.கலையரசன், 46வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>46வது வார்டில் உள்ள சாந்திவனம் இடுகாடு மெயின் ரோட்டின் நடுவெ அணில் நகல்-IIம் தெருவிற்கு செல்லும் வழியில் ஒரு குறுக்கு பாலம் அமைத்திட தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு ஜி.கலையரசன்<br>வழி மொழிந்தவர் :<br>திரு ஜெ.சரீப்<br>நிறைவேறியது |
| **28.06.2024** | 49. திரு ஜெ.சரீப், 47வது வார்டு மாமன்ற உறுப்பினர் கொடுத்துள்ள தீர்மானம்.<br>47வது வார்டில் உள்ள (1) மானோஜிப்பட்டி ரோடு, ரெட்டிப்பாளையம் ரோடு சந்திக்கும் இடம் (2) குமார் போஸ்டல் காலனி, முல்லை நகர் மானோஜிப்பட்டி ரோடு சந்திக்கும் இடம் (3) அருள்ஜோதி நகர், முனியாண்டவர் கோவில் (4) இராமகிருஷ்ணா நகரில் மூன்று ரோடு சந்திக்கும் இடம் ஆகிய நான்கு இடங்களில் பெரிய உயர்மின் கோபுர விளக்குகள் அமைத்திடவும் மற்றும் தமிழ் நகர், விசாலாட்சி நகர் ஆகிய இரண்டு நகர்களில் பழுதடைந்துள்ள இரண்டு ஆழ்குழாய் கிணறுகளை அகற்றி புதிதாக இரண்டு ஆழ்குழாய் கிணறுகளை அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | முன் மொழிந்தவர் :<br>திரு ஜெ.சரீப்<br>வழி மொழிந்தவர் :<br>திரு ஜி.கலையரசன்<br>நிறைவேறியது |
| **28.06.2024** | **50.** மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் **வாழ்த்து தீர்மானம்**<br>தமிழகத்தில் முத்தமிழ் அறிஞர், தமிழினத்தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் தமது அயராத உழைப்பால் 2004ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் ஒருமித்த கருத்தே நிலவுகிறது என்பதை நிரூபிக்கும் வகையில் தமிழக மற்றும் பாண்டிச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெற வைத்து வரலாற்றுச் சாதனையை டாக்டர் கலைஞர் அவர்கள் நிலைநாட்டினார்கள்.<br>அதே போன்று தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியை அங்கீகரிக்கும் வகையில் நடந்து முடிந்த 2024ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரிக்குட்பட்ட 40 மக்களவை தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற்று மீண்டும் வரலாற்றுச் சாதனையை படைக்க காரணமாக இருந்த நல்லாட்சி நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் | ஏகமனதாக<br>நிறைவேறியது |

| | | |
|---|---|---|
| | **மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கும், தஞ்சை மாநகர மக்களின் சார்பாகவும், மாண்புகள் நிறைந்த இம்மாமன்றத்தின் சார்பாகவும் மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதுடன், இச்சரித்திர சாதனை புரிய ஒத்துழைப்பு வழங்கிய தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வாக்காளர் பெருமக்களுக்கும் கோடானு கோடி நன்றிகளை இம்மாமன்றத்தின் சார்பாக தெவித்துக்கொள்கிறோம்.** | |

நாள் : **01.07.2024** ஒம்./ சண்.இராமநாதன்,
இடம்: தஞ்சாவூர். மேயர்.

// உண்மை நகல் //

**மேயர்,**
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், வளர்ச்சி பிரிவு, தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.